**தலைப்பு – 142 தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ்வறிக்கை இரண்டு பகுதிகளுடன் கூடியவை.

**1** ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொழிப்பு அறிக்கை

**2** ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குரிய விரிவான அறிக்கை

1 ஆம் பகுதி

---

தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு மற்றும் அவ்வமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை

---

**1 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 207 | தொல்பொருளியல் திணைக்களம் |
| 208 | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் |
| 209 | தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் |

**2 கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,655,774,595 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,187,789,245 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 49,558,503 இற்கும் ரூபா 231,188,439 இற்கும் இடைப்பட்ட அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 6.65 சதவீத்திற்கும் 61.46 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 142 | 329,260,000 | 195,973,414 | 133,286,586 | 40.48 |
| 207 | 745,204,595 | 695,646,092 | 49,558,503 | 06.65 |
| 208 | 205,170,000 | 151,218,178 | 53,951,822 | 26.30 |
| 209 | 376,140,000 | 144,951,561 | 231,188,439 | 61.46 |
| மொத்தம் | 1,655,774,595 | 1,187,789,245 | 467,985,350 | 28.26 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 03 திணைக்களங்களுக்கான அரச உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | உயர்ந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14201 | 4,500,000 | 4,144,215 | 1,700,000 | 3,388,488 | 28,000,000 | 9,672,594 |
| 20701 | 50,000,000 | 32,585,044 | 23,000,000 | 30,093,808 | 150,000,000 | 26,349,687 |
| 20801 | 9,000,000 | 9,323,152 | 4,500,000 | 7,786,378 | 45,000,000 | 23,409,100 |
| 20901 | 6,000,000 | 3,466,234 | 2,500,000 | 3,022,403 | 24,000,000 | 16,548,352 |

## 2.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 2.3.1 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான 02 திணைக்களங்களின் 2013 திசெம்பர் 31 வரையில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 6,557,969 கூட்டுத் தொகையான செலவு மீதிகள் காணப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இல | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு | 7002/0000/00/0421/0013/000 | 4,480,000 |
| தொல்பொருளியல் திணைக்களம | 7002/0000/00/0150/0013/000 | 2,050,061 |
| தேசிய நூதனசாலைகள் திணைக்களம | 7002/0000/00/0149/0013/000 | 27,908 |
| **மொத்தம்** | | 6,557,969 |

### 2.3.2 பொது வைப்புக் கணக்குகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சினதும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களினதும் பொது வைப்புக் கணக்குகள் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,129,051ஆக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கிலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு | 6000/0000/00/0015/0183/000 | 4,583,274 |
| தொல்பொருளியல் திணைக்களம் | 6000/0000/00/0015/0089/000 | 99,788,458 |
| தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 6000/0000/00/0015/0091/000 | 24,200,768 |
| தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் | 6000/0000/00/0015/0090/000 | 4,556,551 |
| மொத்தம் | | **133,129,051** |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு தலைப்புக்குரிய விரிவான அறிக்கை

## 1. தலைப்பு 142 – தேசிய மரபுரிமைகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 26 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**1.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், தேசிய மரபுரிமைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இதன் (அ) முதல் (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 1.4 முதல் 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 03 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,150,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 15 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அச் செலவின ஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு தேறிய ஏற்பாட்டில் 72 சதவீதத்திலிருந்து 97 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது 142-2-3-15-2502 ஆம் செலவின விடயத்திற்கு வேறு செலவின விடயங்களிலிருந்து ரூபா 10,000,000 தொகையான நிதி ஏற்பாட்டு நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முற்றாக எஞ்சியிருந்தன.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரியின் கணனி அச்சீட்டு அறிக்கைகளின் படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் வரவு மீதியும் அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன் மற்றும் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவு மீதிக்கும் இடையே ரூபா 1,000,627 தொகையான வேறுபாடு நிலவியது.

**1.4 சொத்து முகாமைத்துவம்**

-------------------------------------------

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---------------------------------------------------------------------------------------------

தேசிய மரபுரிமைகள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த 5 மோட்டார் வாகனங்கள் 2011 ஆம் ஆண்டு முதல் கலாச்சார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இவ் வாகனங்கள் கலாச்சார மற்றும் கலைகள் விவகார அமைச்சிற்கு முறைப்படி ஒப்படைக்கப்படுவதற்கு 2014 ஒக்டோபர் இறுதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வேறு நிறுவகத்திடம் உள்ள சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

---------------------------------------------------------------------------------------------------------

கலாச்சார மற்றும் கலைகள் விவகார அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 2 மோட்டார் வாகனங்களும் 3 கெப் வண்டிகளும் முறைப்படி பெறுப்பேற்கப்படாது தேசிய மரபுரிமைகள் அமைச்சின் பயன்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டு முதல் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. மேலும், நிதி திட்டமிடல் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்றும் முறையான வகையில் பொறுப்பேற்கப்படாது தேசிய மரபுரிமைகள் அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

**1.5 இணக்கமின்மைகள்**

---------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

---------------------------------------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| II ஆம் அத்தியாயத்தின் 10.5 ஆம் பிரிவு | - | 2013 மார்ச் 25 ஆம் திகதிய இல. என்எச்/1/3/5/28 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் உதவிச் செயலாளர் (ஊழியர் ஒருங்கிணைப்பு) – (இலங்கை நிர்வாக சேவையற்ற) பதவிக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து மருத்துவ பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| (i) நிதிப் பிரமாணம் 231, 237(அ) மற்றும் 264(1) | 20,000,000 | ஜனகலா கேந்திர நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் கட்டிட நிர்மாணிப்பிற்காக மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய உசாவுகைப் பணியகத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களுடன் கொடுப்பனவிற்குரித்தான சகல விபரங்களும், திருப்திகரமாக சேவையைப் பூர்த்தி செய்தமைக்கான உறுதிப்படுத்தல் மற்றும் கொடுப்பனவிற்குரித்தான பற்றுச்சீட்டுக்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

(ii) நிதிப் பிரமாணம் 447(1) மற்றும் (5) - ஒதுக்கீட்டு (அனுமதிக்கப்பட்ட) செலவினப் பேரேட்டின் நடப்பாண்டிற்குரித்தான பிணைகள் பதியப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 756(1) மற்றும் (4) முன்னைய ஆண்டுகளின் போதும் 2013 ஆம் ஆண்டுகளின் போதும் ஜனகலா கேந்திர நிலையத்தின் வருடாந்த பொருள் மெய்மையாய்வைப் போன்று 2013 செப்தெம்பர் 30 ஆம் திகதி விசேட பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அன்றைய தினத்தில் ஜனகலா கேந்திர நிலையத்தின் நூலக பயன்பாட்டுப் பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள 2,927 புத்தகங்கள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

----------------------------------------------

1980 ஏப்ரல் 01 ஆம் திகதிய 162 – ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் 07 ஆம் பந்திகள் மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 9/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தி - 2013 மார்ச் 25 ஆம் திகதி அமைச்சிற்கு நியமனம் பெறப்பட்டு வருகை தந்த உதவிச் செயலாளர் (ஊழியர் ஒருங்கிணைப்பு) (இலங்கை நிர்வாக சேவையில் அல்லாத ஓர் உத்தியோகத்தர்) 2014 மே 19 ஆம் திகதி வரை தமது வருகையை, வருகைப் பதிவேட்டிலோ அல்லது விரலடையாள இயந்திரத்தின் மூலமோ உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 செயலாற்றல்

---------------------

### போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான பணிகள்

----------------------------------------------------------------------------------------------------------

2013 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி கிழக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருளியல் இடங்களை இனங்கண்டு அவற்றை வர்த்தமானியின் மூலம் ஞாபகார்த்த மற்றும் பாதுகாக்கப்பட வேண்டிய இடங்களாக பரிந்துரைக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக ரூபா 5.5 மில்லியன் தொகையும் அம்பாறை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட

தொல்பொருளியல் பகுதிகளில் பெயர்ப் பலகை இடும் செயற்திட்டத்திற்காக ரூபா 4.5 மில்லியன் தொகையுமாக 2013 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 10 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணமும் உள்ளடங்கும் வகையில் இச் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அம்பாறை மாவட்டத்தில் மாத்திரம் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ‘‘தெயே உருமய தருவன்ட’’ எனும் கருப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2.5 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஹம்பாந்தோட்டை அம்பாறை மற்றும் மொனறாகலை போன்ற மாவட்டங்கள் மற்றும் மேல் மாகாண அறநெறிப் பாடசாலைகளை அறிவூட்டல் உள்ளடங்கலாக 10 நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 10 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 730,483 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் இது 2013 ஆம் ஆண்டின் மொத்த ஏற்பாட்டில் 30 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வாறே நிகழ்ச்சித்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் நடாத்தப்படுவதற்கிருந்த 02 நிகழ்ச்சித்திட்டங்கள் எதிர்காலத்திற்குப் பிற்போடப்பட்டிருந்த போதிலும் பின்னர் அவை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ‘‘தெயே உருமய தருவன்ட’’ எனும் கருப்பொருளின் கீழ் பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டத் தொகுப்பின் மூலம் இலக்காகக் கொண்ட ஓர் முக்கிய பணியாக தேசிய மரபுரிமை மாணவர் ஒன்றியம் ஒன்றை உருவாக்குவதாகும். இது தொடர்பாக 2012 ஏப்ரல் 04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சகல பாடசாலைகளுக்கும் (6 - 13 ஆம் தரம்) அறிவுறுத்தல் கைநூல் ஒன்று தேசிய மரபுரிமைகள் தொடர்பாக அமைச்சால் வெளியிடப்பட்டிருந்தது. இதன் படி பாடசாலை மட்டத்தில் உருவாக்கப்பட்ட மாணவர் ஒன்றியம் தொடர்பான தகவல்களைப் பெற்றுத் தரும்படியும் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எனினும், 2 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் 09 மாணவர் ஒன்றியங்களின் தகவல்கள் மாத்திரம் தேசிய

மரபுரிமைகள் அமைச்சிற்குக் கிடைக்கப்பெற்றிருந்தன. இதன் படி அமைச்சின் நோக்கங்களுக்கு இணையான இந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக போதிய பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**1.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

அமைச்சின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜனகலா கேந்திர நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்காக வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிராத போது பாதீட்டு உதவிச் சேவைகள் திடீர் தேவைப்பாட்டுப் பொறுப்புகள் செயற்திட்டத்தால் ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது தொல்பொருளியல் மரபுரிமைப் பாதுகாப்பிற்காக மத்திய கலாச்சார நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 20 மில்லியன் தொகை இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தேசிய மரபுரிமைகள் தொடர்பான அறிக்கை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களை அறிவூட்டுவதை நோக்காகக் கொண்டு மேலும் நவீனமயமாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தயாரிப்பதற்காக அச் செயற்பாடு தனியார் நிறுவகமொன்றிற்கு ஒப்படைக்கப்படுவதற்கு 2013 இன் இறுதிக் காலாண்டின் போது அமைச்சு தீர்மானித்திருந்தது. இவ் அறிக்கையீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் உற்பத்தி செய்யும் வளங்கள் (பௌதீக மற்றும் மனிதவளங்கள்) அமைச்சின் ஊடகப் பிரிவில் நிலவிய போதிலும் அவ் வளங்கள் பயன்படுத்தப்படாது 2014 பெப்ரவரி 06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ரூபா 150,000 தொகையான விலைகளில் மேற்குறித்த நிறுவகத்திற்கு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2014 செப்தெம்பர் மாதம் இறுதியிலும் அவ் அறிக்கையீட்டு நிகழ்ச்சித்திட்டம் உள்ளடங்கலான இறுவட்டுக்கள் அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 பெப்ரவரி 02 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தின் படி தொல்பொருளியல் பாதுகாப்பு மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மத்திய கலாச்சார நிதியத்தை உழைக்கும்

வருமானத்தில் 25 சதவீதம் தேசிய மரபுரிமைகள் தொடர்பாக அமைச்சிற்கு வழங்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அமைச்சின் வருடாந்தப் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடுகளை மேற்கொள்ளும் செயற்திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக மத்திய கலாச்சார நிதியத்தின் மூலம் வழங்கப்படும் பணத்தைச் செலவிட முடியாத போதிலும் அமைச்சால் திறைசேரி நிதி பெறப்பட்டதை அடுத்து தீர்க்கும் அடிப்படையில் மத்திய கலாச்சார நிதியத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 23,089,235 தொகை அந் நிகழ்ச்சித்திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 12,089,235 தொக 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 முகாமைத்துவ திறமையீனங்கள்

2006 சனவரி 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட அமைச்சரவைத் தீமானத்தின் படி ஒவ்வொரு நிறுவகம் தொடர்பாகவும் ஸ்தாபிக்கப்படும் பின்தொடர் நடவடிக்கைக் குழுவின் மூலம் அதி மேதகு சனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட 2006 சனவரி 10 ஆம் திகதிய குறிப்பில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை எய்துவதும் நிறுவகங்களின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக பதவியணி பிரமுகர்களைப் பங்கேற்கச் செய்வதும் நோக்காகக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சும் இதன் கீழ் நிலவும் நிறுவகங்களின் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளும் முறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறெனினும், அமைச்சால் பின்தொடர் நடவடிக்கைகள் 2 நிறுவகங்களுக்காக மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 4 நிறுவகங்களுக்காக 2013 திசெம்பர் 31 வரையில் பின்தொடர் நடவடிக்கைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவை நடைமுறைகளிலிருந்து விலகல்

அவுகன மற்றும் மாலிகாவில புத்த சிலைகளுக்கு பாதுகாப்புக் கூரைகளை நிர்மாணிக்கும் ஒவ்வொரு செயற்பாட்டிற்காகவும் ரூபா 15 மில்லியன் படியான கிரய மதிப்பீட்டுப் பெறுமதியின் கீழ் அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் அரசாங்கத் தொழிற்சாலையின் மூலம் விலைகள் கோரப்பட்டு அவ் விலைகள் நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதாக நிதி, திட்டமிடல் அமைச்சரால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், இதற்கு மாறாக அரசாங்கத் தொழிற்சாலைக்கு நேரடியாக

ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவ் ஒப்பந்தத்தின் கீழ் ஒவ்வொரு நிர்மாண வேலைகளுக்காக ரூபா 15 மில்லியன் படியான கிரய மதிப்பீட்டிற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நேரடியான ஒப்பந்த வழங்கலின் கீழ் ஒவ்வொரு நிர்மாணிப்பிற்காகவும் ரூபா 18,424,000 படியான கிரயப் பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் வழிகாட்டலுக்கு மாறாக அரசாங்கத் தொழிற்சாலைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதை அடுத்து தாமதமாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மற்றைய பாதுகாப்புக் கூரை நிர்மாணிக்கப்படுவதற்காக தொழிற்சாலையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறே அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 5.4.4(1) ஆம் வழிகாட்டலுக்கு மாறாக நிர்மாணிப்பு ஒப்பந்தங்களின் பெறுமதியில் 20 சதவீதமான உச்ச எல்லைக்கு மேலதிகமாக முறையே 38 சதவீதமும் 27 சதவீதமுமான அதாவது ரூபா 7,000,000 தொகையும் ரூபா 5,000,000 தொகையுமான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. முற்பணக் கொடுப்பனவிற்காக அமைச்சால் ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய முற்பணப் பிணையும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 1.10 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 47 | 36 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 23 | 01 |
| (v) | ஏனைய | 04 | 02 | 02 |
| | மொத்தம் | 90 | 74 | 16 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. தலைப்பு 207 - தொல்பொருளியல் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தொல்பொருளியல் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 17 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுத்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்வெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் தொல்பொருளியல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே(அ) முதல் (ஊ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 முதல் 2.13 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை

திணைக்களத்தினால் நிதிப்பிரமாணம் 802 இன் பிரகாரம் வாகனப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை

2014 ஏப்ரல் 7 ஆம் திகதிய ரீஎம்/பி/ஏசீஎச்/ஜஎன்எவ்ஓ/2014/08 இலக்கம் கொண்ட தகவல் கோரும் கடிதத்தில் வடமத்திய மாகாண அலுவலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அத் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டினுள் முன்வைக்கப்பட்ட 11 ஐய வினாக்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட 03 ஐய வினாக்களுக்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஈ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இரு செலவின விடயங்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ரூபா 5,577,110 ஆன மொத்த தேறிய ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாட்டின் பாவனைக்குப் பின்னரான மீதியானது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்களைக் கடந்த ரூபா 7,736,012 ஆன 23 வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கையெடுக்கப்பட்டிராததுடன் 2014 திசெம்பர் 29 ஆம் திகதியில் அப்பெறுமதி ரூபா 202,889 ஆகக் காணப்பட்டது.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 20707 ஆம் விடய இலக்கம் கொண்ட முற்பணக் கணக்கு தொடர்பில் 2013 திசெம்பர் 31 இன் இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,718,849 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்கம் கொண்ட அரச நிருவாகச் சுற்றறிக்கைக்கு முரணாக 12 உத்தியோபத்தர்களின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இடர் கடன் மீதியானது ரூபா 250,000 ஆன எல்லையினை விஞ்சியிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களித்தகைமையும்

---

**வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்**

---

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்து முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2010 ஆம் ஆண்டின் திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎவ்/ கணிப்பீட்டுச் சபை / 01 ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆம் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் அவ் அறிக்கையானது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையானது 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. 2009 ஆம் ஆண்டின் பின் காரியாலயத்தில் வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடைபெற்றிருக்கவில்லை.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நிதிப் பிரமாணம் 715(2) | பொருட்களை கையேற்றல், பொறுப்பில் வைத்திருத்தல் மற்றும் விடுவித்தல் போன்ற செயற்பாடுகள் களஞ்சியப் பொறுப்பாளரொருவரால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், பிரதான காரியாலயத்தில் அமைந்துள்ள களஞ்சியத்திற்கு 2014 ஒக்தோபர் மாதம் வரையிலும் உரிய முறையில் களஞ்சியப் பொறுப்பாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 751 | அரச திணைக்களங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற சகல பொருட்களையும் பொருட் பதிவேட்டில் உட்படுத்த வேண்டிய போதிலும், 2013 மே மாதத்தின் பின்னரான நுகர்வுப் பொருட் கொள்வனவுகள் உரிய முறையில் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் கைவிடுதல், செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காமல் கைவிடுதல்

திணைக்களத்தால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (i) | வலஸ்முல்ல அதுபோதே விஹாரையின் விஹாரை மனையைப் பாதுகாத்தல் | 2,011,831 | 2013.05.07 | 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாமை |
| (ii) | வலய அலுவலகக் கட்டிடத்தையும் களஞ்சியத்தையும் நிர்மாணித்தல். அலகேஷ்வர வேலைத்தளம் | 1,281,188 | 2013.06.15 | கட்டிடம் திட்டம் அங்கீகரிக்கப்படாமை |
| (iii) | விஜயராம நூதனசாலையில் பழைய தகாபை மற்றும் மேடைச்சுவர் பாதுகாத்தல் | 2,014,637 | 2013.01.01 | வேரோரு செயற்திட்டத்திற்கு நிதியேற்பாட்டினைச் செலவிட வேண்டியேற்பட்டமை |
| (iv) | தோலங்கமுவ விஹாரையின் போதனை மண்டபத்தைப் பாதுகாத்தல் | 3,071,007 | 2013.04.01 | பலகைகளை விநியோகிப்பதில் சிக்கலேற்பட்டமை |
| (v) | மன்னார் கோட்டையின் அளவை திட்டமிடல் | 137,500 | 2013.04.22 | காரணம் குறிப்பிடப்படவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | புதுருவகல நூதனசாலை கட்டிடத்தின் கூரையைப் பராமரித்தல் | 1,358,803 | 2013.02.15 | பிரதேச கொள்வனவுக்குழுவிளை நியமிப்பதில் சிக்கலேற்பட்டமை |
| (vii) | புதுருவகல கிராமிய மனை கட்டிடத்தை புனர்நிர்மாணம் செய்தல் | 352,429 | 2013.01.15 | காரணம் குறிப்பிடப்படவில்லை |
| (viii) | கிரிஒருவ அம்பலத்தினை பாதுகாத்தல் | 165,888 | 2013.02.12 | பிரதேச கொள்வனவுக்குழு நியமித்தலில் சிக்கலேற்பட்டமை |
| (ix) | பஸ்ஸர விஹாரையின் சிலையின் பாதுகாப்புச் சுரினைப் பராமரித்தல் | 109,850 | 2013.01.20 | பிரதெச கொள்வனவுக் குழு நியமித்தலில் சிகலேற்பட்டமை |
| (x) | அம்பலன்தொட வெலிபடன்வில கங்காராமையின் போதனை மண்டபத்தைப் பாதுகாத்தல் | 4,340,860 | 2013.05.07 | நிதி பிற நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமை |

**(ஆ) செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதில் தாமதம்**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களை நிறைவேற்றும் பொருட் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட தினங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பௌதீக முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அச் செயற்திட்டங்களை உரிய இலக்கிடப்பட்ட தினங்களில் நிறைவேற்ற முடியாதிருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்த திகதி | 2013 திசெம்பர் 31 வரையில் நிதி முன்னேற்றம் | 2013 திசெம்பர் 31 வரையில் பௌதீக முன்னேற்றம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | | |
| (i) | துர்பே புராதன விற்பனை நிலையத்தின் புனர்நிர்மாணம் | 2,204,225 | 2013.02.01 | 2013.12.31 | 58 | 50 | காணரம் குறிப்பிடப்பட வில்லை |
| (ii) | தியஒராஹேன பத்தினி ஆலயத்தினை நிருவகித்தல் | 3,469,173 | 2013.07.31 | 2013.07.31- | - | 25 | காரணம் குறிப்பிடப்பட வில்லை |
| (iii) | யுதனாவ தாகபை செயற்திட்டம் | 10,000,000 | 2013.03.30 | 2013.12.10 | 35 | 30 | செங்கல் விநியோகம் தாமதமடைந்தமை |
| (iv) | ருவன்வெல்ல பிரகாரச் சுவர் மற்றும் ஜுபிலி அம்பலம் | 6,107,497 | 2013.03.13 | 2013.03.13 | - | 40 | நெடுஞ்சாலைச் செயற்திட்டமொன்றிற்கு பிரகாரச் சுவரின் ஒருபகுதி உள்ளடங்கியமையால் நிறுத்தப்பட்டமை |

**2.8 செயலாற்றல்**

**போதியளவு நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **தெலிவல தாது கோபத்தின் பாதுகாப்பு**

தெலிவல தாதுகோபத்தினைப் பாதுகாக்கும் செயற்பாடுகள் 1998 ஆம் ஆண்டு முதலே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அச் செயற்பாடுகள் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவிலும் பூர்த்திசெய்யப்படாதிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தாதுகோபத்தின் சுற்றுமதில் முழுமையாக சிதைவடைந்திருந்தமையால் தாகபைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தடுக்கும் பொருட்டு தொல்பொருளியல் திணைக்களத்தினால் ஒவ்வொரு சுற்று மதிலினையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது. பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் கடந்திருந்த போதிலும் அதன் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) தாது கோபத்தினை முழுமையாகப் பாதுகாப்பதற்கு சுற்று மதிலானது 18 அடிகள் உயரத்திற்கு கட்டியெழுப்பப்பட வேண்டுமெனினும், 2014 மார்ச் மாதமளவிலும் 13 அடி உயரம் மற்றும் 10-14 அடி அகலம் கொண்ட சுற்றுமதில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தாது கோபத்தின் கர்ப்பக்கிரகத்தில் கற்கள் பெயர்ந்து உடைந்து விழுந்து சேதமடையும் சாத்தியம் உள்ளமையால் அவற்றை உடனடியாக பாதுகாக்க வேண்டிய அவதானமொன்று காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் சுற்றுமதிலின் எஞ்சிய பகுதியினை அடிப்படையாகக் கொண்டு 5 அடிகள் கட்டியெழுப்புவதற்கும் கர்ப்பக்கிரகத்தினை பாதுகாப்பதற்கும் ரூபா 50 மில்லியன் பெறுமதியான மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் சுற்றுமதிலினை 5 அடிகளை வரை பூர்த்தி செய்வதற்கு ரூபா 9,929,500 ஆன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இம் மதிப்பீட்டிற்குரிய செயற்திட்ட யோசனைக்கு அமைய அச் செயற்திட்டமானது 2013 ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2013 செப்தம்பர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்கு

உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 மார்ச் மாத இறுதி வரையிலும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) மத்திய மாகாண விஹாரையின் வாஸ்து சாஸ்திர பாதுகாப்புச் செயற்திட்டம்**

மத்திய மாகாணத்தின் தன்துரே விஹாரையின் வாஸ்து சாஸ்திர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 923,750 பெறுமதியான மதிப்பீடொன்று செய்யப்பட்டிருந்ததுடன் அம் மதிப்பீடானது 2013 ஆம் ஆண்டின் தொல்பொருளியல் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 2.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தலின் குறைபாடுகள்

**சீராக்கம் செய்யப்பட வேண்டிய மீதி**

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் இனங்காணப்படாத வரவு மீதிகள் ரூபா 1,118,474 ஆன கூட்டுத்தொகையாகக் காணப்பட்டது. அம் மீதியினுள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக உள்ள இனங்காணப்படாத வரவு மீதியாக ரூபா 1,009,990 ஆன கூட்டுத்தொகை காணப்பட்ட போதிலும், அம் மீதி 2014 ஆகஸ்ட் வரையிலும் தீர்வு செய்யப்படாதிருந்தது.

## 2.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தின் மின்சாரக் கட்டமைப்பினை பராமரித்தல் செலவினம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தொல்பொருளியல் திணைக்களத்தின் கட்டிடத்தின் மின்சாரக் கட்டமைப்பினை பராமரித்தல் நடவடிக்கைகளுக்காக மின்சார சபைக்கு 2011,2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக ரூபா 2,889,947 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அச்செலவினத்தினுள் மின்சார பராமரித்தல் பொருட்டு ரூபா 2,642,865 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் எழுத்துமூல ஒப்பந்தமொன்றிற்கு முனைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற பராமரித்தல் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளோ ஆவணச்சான்றுகளோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அச் செலவினத்தை திருப்திகரமானதாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.11 நட்டங்களும் சேதங்களும்

---------------------------------------

தேசிய நூதனசாலைக்கு உரிய வான் வாகனமொன்று தேசிய உறுத்துரிமைகள் தொடர்பான அமைச்சின் செயலாளரின் வேண்டுகோளின் பிரகாரம் 2013 யூலை 15 முதல் ஒரு மாத காலத்திற்கு அம்பாறை தொல்பொருளியல் நிலையத்தின் ஆவணப்படுத்தும் செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக தொல்பொருளியல் திணைக்களத்திற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் அவசர மீள்திருத்தல் பணிகள் தொடர்பில் ரூபா 585,822 ஆன செலவொன்றினை தொல்பொருளியல் திணைக்களம் ஏற்க வேண்டியிருந்தது.

## 2.12 முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் பின்வரும் நலிவகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) தொல்பொருளியல் வெகுமதி நிதியம்

----------------------------------------------------------

1998 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க கொண்ட தொல்பொருளியல் கட்டளைச்சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் கீழ் தொல்பொருளியல் வெகுமதி நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்ட புராதனப் பொருட்களை மீளப்பெறுதல், புரதானப் பொருட்களைப் பாதுகாப்பதற்கு அல்லது பங்களிப்புச்செய்யும் நபர்களுக்கு அல்லது உத்தியோகத்தர்களுக்கு அவர்களின் செயற்திறனையும் வினைதிறனையும் அதிகரிக்கும் நோக்கில் இந் நிதியமானது ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகித வரையான காலப்பகுதிக்குரிய நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட ரூபா 44,619,540 கூட்டுப்பெறுமதியான தண்டப்பணமானது திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அத்தொகை 2013 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் நிதியத்திற்கு செலவு

வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 யூன் 22 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நிதியத்தினை உருவாக்கியமைக்கான நோக்கத்தினை அடைவதற்கு பங்களிக்கும் உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் வகையில் நிதியத்தின் நிதியானது பயன்படுத்தப்படாது வைப்புக் கணக்கில் தேக்கி வைத்திருந்தமையால் நிதியத்தின் நோக்கங்கள் எய்தப்படாதிருந்தது.

(ii) 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் கலென் பிந்துனு வெவ காவல்துறைப் பிரிவினுள் புராதனப் பொருட்களை தேடுதல் முயற்சியில் ஈடுபடல் மற்றும் தொல்பொருளியல் பெறுமதியுடைய இடங்களுக்கு சேதம் விளைவித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கஹட்டகஸ்திகிரிய நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த 3 வழக்குகளில் குற்றவாளிகளுக்கு ரூபா 12,300,000 ஆன தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. அத் தண்டப்பணங்களில் தொல்பொருளியல் வெகுமதி நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 4,700,000 ஆன தொகையினை நிதியத்திற்குப் பெற்றுக்கொள்ளத் திணைக்களம் தவறியிருந்தது.

(iii) தொல்பொருளியல் வெகுமதி நிதியத்தின் பெறுபேறானது திணைக்களத்தின் சகல செயற்பாட்டுச் சபைகளுக்கும் பகிரப்படும் வகையில் தொல்பொருளியல் வெகுமதி நிதியத்தின் ஏற்பாடுகளை ஒழுங்கமைக்குமாறு திணைக்களத்துடன் தொடர்புடைய சுமார் 8 தரப்பினரிடமிருந்து பல்வேறு எழுத்துமூலமான யோசனைகளும் வேண்டுகோள்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. எனினும் திணைக்களம் அது தொடர்பில் பொருத்தமான நடவடிக்கையெடுக்கத் தவறியிருந்தது.

**(ஆ) கற்குவாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டிலான குறைபாடுகள்**

---

இது தொடர்பில் நடாத்தப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசொதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) அனுமதிப்பத்திம் வழங்குவதற்காக சாதாரணக் கடிதமொன்று பயன்படுத்தப்படும் அதேவேளை ஒவ்வொரு மாவட்டம் அல்லது மாகணங்களின் அடிப்படையில் இலக்கம் முத்திரையிடப்பட்ட பாதுகாப்புக் கடித உறைகள் அதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ii) வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் மாவட்ட அல்லது மாகாண ரீதியில் விபரங்கடங்களிய பதிவேடொன்று பிரதான காரியாலத்தில் பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) புராதனப் பொருட்களைச் சேதப்படுத்துதல் - சீனக்குகல**

---

தொல்பொருளியல் இலட்சிணைகள் அமைந்துள்ள பிரதேசத்தின் 50 மீட்டர் எல்லையினுள் கல்லுடைத்தல், கல்வெடிகளை வெடிக்கச்செய்தல் ஆகியவற்றை தவிர்த்தல் மற்றும் இனங்காணப்பட்ட புராதனப் பொருட்களுக்கு சேதம் விளைவிக்காமை ஆகிய நிபந்தனைகளின் அடிப்படையில் ஹம்பாந்தோட்டை சீனன்குகல கற்குவாரியில் கற்களை உடைக்கும் பொருட்டு 2006 திசெம்பர் 01 ஆம் திகதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவ் அனுமதிப்பதிர பெறுநரால் அந் நிபந்தனைகள் அத்துமீறப்பர்ாட்டிருந்தமையால் 2008 ஒக்தோபர் 23 ஆம் திகதி அவ் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்பட்டிருந்தது. 2011 பெப்ரவரி 15 ஆம் திகதி நிபந்தனைகள் உள்ளடங்கலாக அந் நபருக்கே அக் கற்குவாரியில் கல்லுடைப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 2013 நவம்பர் 01 ஆம் திகதி தொல்பொருளியல் திணைக்கள உத்தியோகத்தர்களால் அவ்விடத்தில் களப்பரிசோதனை நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அவ் அனுமதிப்பத்திர பெறுநரின் நடவடிக்கைகள் காரணமாக முன்னர் இனங்காணப்பட்டிருந்த புராதனச் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டிருந்தன. புராதனச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தமை தொடர்பில் அவ் அனுமதிப்பத்திர பெறுநர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் ரூபா 100,000 ஆன தண்டப்பணம்

விதிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) தொல்பொருளியல் திட்ட அளவைகளுக்கு முரணாக கற்குவாரிகளை நடாத்திச்சென்ற நபர்களை ஆவணப்படுத்தும் செயல்திட்டமொன்று காணப்படவில்லை.

(ii) கற்குவாரிகளை நடாத்திச்செல்வதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளை அத்துமீறியமையால் 2008 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டிருந்தும், 2011 ஆம் ஆண்டில் அவ்விடத்திலேயே கற்குவாரியொன்றினை நடாத்திச் செல்வதற்கு அந்த நபருக்கே அனுமதிப்பத்திரம் வழங்குவதில் தொல்பொருளியல் திணைக்கள உத்தியோகத்தர்கள் பொறுப்பின்றி செயற்பட்டுள்ளனர்.

(iii) தொல்பொருளியல் பெறுமதிக்க பிரதேசமாக அடையாளங்காணப்பட்டு அதற்கு அண்மிய பிரதேசத்தில் கற்குவாரியொன்றினை நடாத்திச்செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்த போது 2011 பெப்ரவரி 15 முதல் 2013 ஒக்தோபர் மாதம் இறுதி வரையிலும் 2 ½ வருடங்களுக்கு அதிமான காலத்தினுள் தொல்பொருளியல் பொருட்கள் தொடர்பில் திணைக்கள உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) புராதனப் பொருட்களைச் சேதப்படுத்தல் - பலுதெனிய**

---

பொலன்னறுவை மாவட்டத்தின் திம்புலாகல பிரதேச செயலாளர் பிரிவின் இலக்கம் 229 கொண்ட சிரிபுர கிராம சேவகர் பிரிவின் பலுதெனிய கிராமத்தின் 50 ஏக்கர்கள் கொண்ட நிலப்பிரதேசத்தினுள் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளுக்குரிய அறிக்கைகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட 08 புராதனச் சின்னங்கள் மற்றும் வரலாற்று எச்சங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. அவ் அறிக்கையின் தீர்மானங்கள் மற்றும் பிரேரணைகளின் அடிப்படையில் கல்லுடைத்தல் செயற்பாடுகள் நிறுத்தப்படவேண்டும் எனவும் புராதனச் சொத்துக்களை சேதப்படுத்தல் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 ஒக்தோபர் 10 ஆம் திகதி தொல்பொருளியல் உதவிப் பணிப்பாளர் (வடமத்திய) மற்றும் அவரது பதவியணியினர் உள்ளடங்கலாக கருங்கல்லுடைத்தல் நடைபெறும் நிலப்பரப்பில் புராதனச் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பில் பரிசோதனையொன்றினை மேற்கொண்டிருந்தனர். அப் பரிசோதனையின் போது புராதன செங்கல் எச்சங்கள் அவதானிக்கப்பட்டதுடன் மேற்புறத்தில் வேறு புராதனச்னங்களின் எச்சங்கள் காணக்கூடியதாக இருக்கவில்லை என கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், 2004 ஆம் ஆண்டின் முதன்மை ஆராய்ச்சி அறிக்கையின் தீர்மானங்கள் மற்றும் பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்படாதிருந்தோடு இனங்காணப்பட்ட 8 புராதனச் சின்னங்கள் மற்றும் வராலாற்று எச்சங்கள் சேதமடைந்திருந்தது.

(ii) பலுதெனிய முதன்மை ஆராய்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இந் நிலப்பிரதேசம் பாதுகாக்கப்பட்ட நிலப்பரதேசமாக அறிவிக்கப்பட்டு, பொருத்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு புராதன சின்னங்களை அறிக்கையிடல் போன்ற செயற்பாடுகள் 2013 ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அவ்வாறு செயற்படாமைக்கான நியாயமான காரணங்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே புராதனச் சொத்துக்களின் சேதம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்கண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) அலங்கேஷ்வர் வலய அலுவலகம் மற்றும் களஞ்சியசாலையை நிர்மாணித்தல்**

---

கோட்டை வலயத்தின் 03 ஆம் இலக்க தொல்பொருளியல் அலுவலகம் மற்றும் களஞ்சியசாலையை நிர்மாணிக்கும் செயற்திட்டமானது கோட்டை அலங்கேஷ்வர் தொல்பொருளியல் நிரப்பிரதேசத்தில் 2013 ஆகஸ்ட் 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2013 ஒக்தோபர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்படாதிருந்தது. இச் செயற்திட்டத்தின் பாதிடப்பட்ட செலவினம் ரூபா 1,463,968 ஆகும். செயற்திட்டத்தின் கட்டிடத் திட்டமானது அங்கீகாரத்திற்காக நகரசபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும்,

காணியின் வரைபடமானது சமர்ப்பிக்கப்படாமையால் 2013 திகதி வரையிலும் திட்டம் தொடர்பில் அங்கீகாரம் வழங்கப்படாதிருந்ததோடு கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) மத்திய மாகாணத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட உத்தியோகத்தருக்கு சாதாரணமான முறையில் ஓய்வூதியம் வழங்குதல்**

மத்திய மாகாணத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டில் வெளிக்கொண்டுவரப்பட்ட மோசடிகள் தொடர்பில் அமைச்சரவை மட்டத்தில் ஆரம்ப விசாரணைக்குட்படுத்தப்பட்ட பிரதேச தொல்பொருளயில் பணிப்பாளர் (மத்திய) 60 வயதை பூர்த்தி செய்தமையால் ஓய்வூதிய விதிக்கோவையின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் ஓய்வூதியமளிக்கப்பட்டிருந்தது. ஓய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பித்த சந்தர்ப்பத்தில் ஆரம்ப விசாரணைகளுக்குரிய நீதிமன்ற நடவடிக்கைகள் பூர்த்தியடையாமையால் இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆனைக்குழுவின் விசாணைகள் முடிவடையாமலும் அமைச்சரவைச் செயலாளரின் சிபாரிசினைப் பெற்றுக் கொள்ளாமலும் அதிகாரசபையில் அமைச்சரவைச் செயலாளர் இணங்கியதன் பிரகாரம் ஆரம்ப விசாரணைகள் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பூர்த்தியடையாத போதிலும், அவ் உத்தியோத்தருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டிருந்தது.

**(எ) விற்பனை செய்யப்படாத புத்தகங்கள்**

தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தினுள் 2002,2003,2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளுக்குரிய புத்தகங்கள் மற்றும் பாரியளவிலான வருடம் இனங்காணப்படாத பெருந்தொகையால் உள்ளடங்களாக 47,592 புத்தகங்கள் செயற்பாடற்று காணப்பட்டன. பழைய புத்தகங்கள் அவ்வாறே தலைமை அலுவலக விற்பனைப் பிரிவிலும் 2,166 பழைய புத்தகங்கள் காணப்பட்டன.

**(ஏ) நிருவாக அறிக்கை உள்ளடங்களான புத்தக அச்சிடல்**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தொல்பொருளியல் திணைக்களத்திற்குரிய ஒவ்வொரு பிரிவினாலும் நிருவாக அறிக்கைக்கு தகவல் வழங்காமையால் 2009 ஆம் ஆண்டின் பின்னர்

திணைக்களத்தினால் நிருவாக அறிக்கை அச்சிடப்படாதிருந்தது.

(ii) திணைக்களக் களஞ்சியத்தினுள் 1970 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய 12,196 நிருவாக அறிக்கைகள் காணப்பட்டன. இவ்வாறான அதிக எண்ணிக்கையான புத்தகங்களை அச்சிட்டமைக்கான காரணமானது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாததுடன், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினமானது விளைவற்றிருந்தது.

(iii) Monastic Sri Lanka எனும் புத்தகமானது தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தினால் எழுதப்பட்டிருந்தது. திணைக்களமானது இப் புத்தக அச்சிடல் தொடர்பில் ஒரு புத்தகத்திற்கு ரூபா 1,512 எனும் படியாக 1010 புத்தகங்களுக்கு ரூபா 1,527,120 ஆன தொகையினை செலவிட்டிருந்தது. அச்சீட்டுத் திணைக்களத்தினால் அப் புத்தகங்களில் 997 புத்தகங்கள் திணைக்களத்தின் விற்பனை நிலையத்திற்கு நேரடியாக விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அப் புத்தகத் தொகுதியானது திணைக்களத்தின களஞ்சியப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகளை விடுத்து நேரடியாக விற்பனைப் பிரிவிற்கு புத்தகங்களைப் பெற்றுக்கொண்டமைக்கான ஏதுக்கள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஐ) புராதனச் சொத்து சேதமடைதல் சம்பவங்கள்
------------------------------------------------------------------------------

புராதனச் சொத்துக்கள் காணப்படும் தொல்பொருளியல் சின்னங்கள் உள்ள இடங்களில் புராதனச் சொத்துக்களை திருடுதல், அனுமதியின்றி அகழ்தல் மற்றும் சேதம் விளைவித்தல் உள்ளடங்கலாக தொல்பொருளியல் அதிகாரச்சட்டத்தில் கருதப்படும் குற்றங்களை தடுப்பதற்காக 2008 மார்ச் 04 ஆம் திகதியன்று தொல்பொருளியல் திணைக்களத்தினுள் விசேட காவற்துறைப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்தது. 2012 யூன் 15 ஆம் திகதி அப் பிரிவானது காவற்துறை பிரிவொன்றாக பெயரிடப்பட்டு தொல்பொருளியல் காவற்துறை பிரிவானது தாபிக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற புராதனச் சொத்துக்களின் சேதம் தொடர்பில் காவற்துறை

அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் தொடர்பில் கீழ் குறிப்பிடப்பட்டள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தொல்பொருள் சேதச் சம்பவங்களின் கூட்டுத்தொகை 2012 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 2013 ஆம் ஆண்டின் போது குறைவடைந்திருந்தது. தோல்பொருள் தேடலுக்காக அகழ்வு தொடர்பான நிகழ்வுகளின் எண்ணிக்கை 2012 ஆம் ஆண்டின் 216 இற்கு இணையான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ii) காவற்துறைப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்றிருந்த புராதனச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் சம்பவங்களில் விசாரணை முடிவடையாத சம்பங்களின் எண்ணிக்கையானது 2012 ஆம் ஆண்டில் 104 ஆகக் காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில் அது 168 இனால் அதாவது 61 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(iii) தொல்பொருளியல் அதிகாரச்சட்டத்தின் கீழ் கருதப்படும் குற்றங்கள் தொடர்பில் மாகாணங்களின் அடிப்படையில் அவதானிப்பொன்றை மேற்கொள்கையில் 07 மாகாணங்களில் பதிவுசெய்யப்பட்ட சம்பங்களின் எண்ணிக்கை குறைந்திருந்ததுடன் வடக்கு மற்றும் வடமத்திய ஆகிய இரு மாவட்டங்களில் அதிகரித்திருந்தது. அதிகளவு புராதனச் சொத்துக்கள் காணப்படும் மற்றும் அதிகளவிலான சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்ட வடமத்திய மாகாணத்தினுள் 2012 ஆம் ஆண்டில் 82 சம்பங்கள் பதிவாகியிருந்தமையுடன் 2013 ஆம் ஆண்டில் சம்பங்களின் எண்ணிக்கை 116 வரையில், அதாவது 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஓ) அசையும் புராதனச் சொத்துக்களை பாதுகாத்தல்

தொல்பொருளியில் திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள ஆய்வுகூடத்தினுள் மற்றும் அலுவலக பாதுகாப்புப் பெட்டகத்தினுள் வைக்கப்பட்டிருந்த அசையும் புராதனச் சொத்துக்களை பரிசோதனை செய்யும்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆய்வுகூடம் மூலமாக புராதகச் சொத்துக்களை இனங்காணும் நடைமுறையொன்றாக சீசீஎல் (Colombo Conservation

Labatatory) இலக்கங்கள் வழங்கப்பட்டு கண்ணாடி அலுமாரிகளில் களஞ்சியப்படுத்துத்தப்பட்டிருந்தன. 2013 செப்தம்பர் 03 ஆம் திகதியளவில் 667 பொருட்கள் தொடர்பில் சீசீஎல் இலக்கங்கள் வழங்கப்பட்மைக்கு மேலதிகமாக பதிவு இலக்கம் மற்றும் திகதி அலுமாரி இலக்கம் புராதனச் சொத்தின் பெயர் மற்றும் அப் புராதனச் சொத்து தொடர்பான விபரங்கள் சீ.ஆர் புத்தகமொன்றில் பதிவுச் செய்யப்பட்டிருந்தது. சில புராதனச் சொத்துக்களை பதிவுசெய்த தினம் அல்லது பெற்றுக்கொண்ட இடம் தொடர்புடைய அல்லது புராதனச் சொத்தினது முக்கியத்துவம் தொடர்பிலான சாட்சிகள் காணப்படாமை வெளிப்படுத்தப்பட்டது. பல்வேறு சகாப்தங்களில் கண்டுபிடிக்கப்பட்ட புராதனச் சொத்துக்களை இலகுவில் இனங்காண்பதற்குரிய ஒழுங்கமைத்த வேலைத்திட்டமொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(i) இரசாயனப் பிரிவின் உத்தியோகத்தர்களால் புராதனச் சொத்துக்கள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் புதிய இலக்கங்கள் வழங்கப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததெனினும் அத்தகவல்கள் கணனிமயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) புராதனச் சொத்துக்களை ஆவணப்படுத்தும் போது புராதன நாணயங்களின் பாரிய தொகையொன்று ஒரு பொதிக்கு ஒரு இலக்கம் என்ற ரீதியில் வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் உள்ள நாணயங்களின் எண்ணிக்கையோ நிதிப்பெறுமதி பற்றிய அவதானமோ ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பல வருடங்களாக புராதனச் சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன் புராதனச் சொத்துக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அலுமாரிகளின் பிரகாரம் புரதானச் சொத்துக்களை ஆவணப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தற்போது காணப்படும் புரதானச் சொத்துக்கள் மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டிருந்த போதிலும், சேதமடைந்த புராதனச் சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஓ) தலைமை அலுவலகத்தின் இரசாயனக்கூடம் மற்றும் பாதுகாப்புப் பெட்டகங்களிலுள்ள புராதனச் சொத்துக்கள்

---

இது தொடர்பின் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புராதனச் சொத்துக்களானவை 20 முதல் 30 ஆண்டுகள் வரை மர அலுமாரிகளில் வைக்கப்பட்டிருந்தன. அவ் அலுமாரிகளில் இடம் போதமை, மற்றும் தேவையான ஒளி மற்றும் காற்று இன்மை போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் பழைய நாணயங்கள் ஒரே உறையினுள் இடப்பட்டு இழுப்பறையினுள் வைக்கப்பட்டிருந்தமையால் ஒன்றோடொன்று ஒட்டி நிறமிழந்து காணப்பட்டன. அப் புரதானச் சொத்துக்கள் பல வருடங்களுக்கு முன்னர் பாதுகாக்கப்பட்டிருந்தமையால் அவற்றை மீண்டும் பாதுகாக்க வேண்டியிருந்தது.

(ii) பாதுக்கப்பட்டபின் புராதனச் சொத்துக்களை நூதனசாலைக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமெனினும் இரசாயன பாதுகாப்புப் பிரிவில் ஆவணப்படுத்தப்படாமல் பாரிய தொகையான புராதனச் சொத்துக்கள் நீண்டகாலமாகக் காணப்படுகின்றன.

(iii) தொல்பொருளியல் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டிடத்தின் 03 இடங்களில் உள்ள 03 பாதுகாப்புப் பெட்டகங்களில் தொன்மையான மற்றும் நிதிப்பெறுமதியுடைய புராதனச் சொத்துக்கள் பல வைக்கப்பட்டிருந்ததுடன் அனைத்து புராதனச் சொத்துக்களினதும் பொறுப்பானது தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்திடம் காணப்பட்டது. எனினும் புராதனச் சொத்துக்கள் பற்றிய போதிய அறிவுடைய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு கையளிப்புச் செய்யப்படாமல் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் தொல்பொருளியல் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளருக்கு அப் புராதனச் சொத்துக்களின் பொறுப்பானது கையளிக்கப்பட்டிருந்தது.

(iv) பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ அறை, கணக்காளரின் உத்தியோக பூர்வ அறை மற்றும் கேட்போர் கூடம் ஆகிய 03 இடங்களில் உள்ள பாதுகாப்புப்

பெட்டகங்களில் மேற்குறிப்பிட்ட பெறுமதியுடைய புராதனச் சொத்துக்கள் வைக்கப்பட்டிருந்தன. அப் பொருட்கள் தொல்பொருளியல் திணைக்களத்தின் கண்காணிப்பிற்கு மற்றும் பொறுப்பேற்றல் அத்துடன் ஆவணப்படுத்தல் போன்றவற்றுக்கு நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மத்திய கலாச்சார நிதியத்தால் அகழும் போது கண்டெடுக்கப்பட்டிருந்த தொல்பொருட்கள் அந் நிதியத்தின் பொறுப்பில் பேணப்படுகின்றன. ஆப் பொருட்கள் தொல்பொருள் திணைக்களத்தின் கண்காணிப்பிற்கும் பொறுப்பிற்கும் பதிவுசெய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) அசையாச் சொத்துக்களை வெளிப்படுத்தல்

---------------------------------------------------------------------------

இலங்கையில் தொல்பொருளியல் ஸ்தலங்கள் மற்றும் 250,000 தொல்பொருளியல் சின்னங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை வெளிப்படுத்தப்பட்டிருந்த தொல்பொருளியல் சின்னங்களின் எண்ணிக்கை 2,139 ஆக இருந்ததுடன் வெளிப்படுத்தப்பட்ட தொல்பொருளியல் பாதுகாப்பு வலயங்களின் (தடைசெய்யப்பட்ட பிரதேசம்) எண்ணிக்கை 116 ஆகக் காணப்பட்டது. வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 527 தொல்பொருளியல் சின்னங்களில் 146 உம், பொலன்னறுவை மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 149 தொல்பொருளியல் சின்னங்களில் 12 சின்னங்களும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமையின் கீழ் நாடு பூராகவும் வியாபித்துள்ள 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இனங்காணப்படாத தொல்பொருளியில் சின்னங்களை இனங்காண்பிதற்காக தேடுதல் மேற்கொள்ளப்பட்டு தகவல்களைச் சேகரிப்பதற்கும், எல்லைகளை அடையாளப்படுத்தலுடன் அத்தொல்பொருளியல் சின்னங்களை வெளிப்படுத்தல் போன்றன தொடர்பில் திணைக்களமானது செயற்திறனான முறையில் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(க) அசையும் சொத்துக்களை ஆவணப்படுத்தல்

---------------------------------------------------------------------------

இலங்கையில் காணப்படும் அசையும் புராதனச் சொத்துக்களை புகைப்படமெடுத்து உரிய முறையில் ஆவணப்படுத்தி தரவுக் களஞ்சியமொன்றை நடாத்திச் செல்லும் செயற்திட்டம் 2010 ஆம்

ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் கீழ் தொல்பொருளியல் திணைக்களம், நூதனசாலைத் திணைக்களம் மற்றும் மத்திய கலாச்சசார நிதியத்திற்குரிய தலைமை அலுவலகம் மற்றும் பிரதேச நூதனசாலையிலுள்ள புராதனச் சொத்துக்கள் மற்றும் வணக்கஸ்தலங்கள், பிரத்தியோக இடங்கள் மற்றும் நபர்களிடமுள்ள பாரிய தொகையானப் புராதனச் சொத்துக்களையும் ஆவணப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தவேண்டிய பௌதீக மற்றும் மனித வளப்பற்றாக்குறை காரணமாக 2010 ஆம் ஆண்டுமுதல் 2013 ஆம் ஆண்டு வரையானக் காலப்பகுதியினுள் இரசாயனக்கூடத்தில் இருந்த 677 புராதனச் சொத்துக்கள் மட்டும் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன.

(கா) நீலகிரி அகழ்வு நடவடிக்கையின் போது கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் தொடர்பான பரிசீலனை

---

தாகபைகளின் பகுதிகள் உடைந்து விழுந்து பாரிய மரங்களால் மூடப்பட்டிருந்த பிரதேசத்தில் அகழ்வு நடவடிக்கைகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் பொன்னாலான கோபுரம், நாணயம், பளிங்கு மற்றும் பெறுமதிமிக்க கல் வகைகளின் பாரிய தொகையொன்று கண்டுபிடிக்கப்பட்டமைக்கான சாட்சிகள் இருந்தன. 2013 ஒக்தோபர் மாதமளவில் நீலகிரி சேயவின் அகழ்வு நிலப்பிரதேசத்தில் 95 சதவீத அகழ்வு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் அண்மிய வரலாற்றில் அதிகளவிலான புராதனச் சொத்துக்கள் கிடைக்கப்பெற்ற தொல்பொருளியல் நிலப்பிரதேசமாக அது பதிவுசெய்யப்பட்டிருந்தது. அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தொல்பொருளியல் உரித்துக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களை கட்டுப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டுமென தொல்பொருளியல் மதியுரை கையேட்டில் குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், நீலகிரி சேயவின் அகழ்வு நடவடிக்கைகளின் போது கீழ்குறிப்பிடப்பட்ட வகையில் அச் சட்டங்கள், விதிகள் மற்றும் விதப்புரைகளுக்கு முரணாக செயற்பட்டிருந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலையப்பொறுப்பு உத்தியோகத்தரொருவரின்றி ஏனைய உத்தியோகத்தர்களின் எண்ணத்தின் பிரகாரம் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) வேலைத்தளத்தில் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு தேவையான அறிவுறைகளும்

வழிகாட்டல்களும் வழங்காது அகழ்வு நிலப்பிரதேசத்தினுள்ளேயே வேறு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

(iii) பயிற்சிச் செயலமர்வின்போது பெற்றுக்கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை (ஆலோசனைக் கோவையின் 6.3 ஆம் பிரிவு) கருத்திற்கொள்ளாது அகழ்வுகளின் போது கிடைத்த புராதனச் சொத்துக்களை உரிய இடங்களிலிருந்து அகற்றுதல் மற்றும் மாணிக்கம் போன்ற நிறக் கற்களை சுத்திகரிப்பிற்கு உட்டுபடுத்துதல் போன்ற செயற்பாடுகள் முறையற்ற மற்றும் நடைமுறைக்கு முரணாக நடைபெற்றிருந்தன.

(iv) கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்களை உள்ளடக்கிய மெழுகுஉறைகள் முத்திரையிடப்படாமல் சில தினங்கள் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தன.

(v) கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்களின் ஒரு பகுதி புகைப்படமெடுக்கப்படாதிருந்தது.

(vii) 2013 ஒக்தோபர் 19 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் தொடர்பில் 2013 ஒக்தோபர் 24 ஆம் திகதி வரையிலும் தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகம் அல்லது வேறு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தொருவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) 2013 ஒக்தோபர் 23 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான தொல்பொருளியல் உதவி பணிப்பாளர் (பதிற்கடமை) நீலகிரி சேயவின் அகழ்வு நிலப்பிரதேசதத்திற்கு வருகைத்தந்து உரிய புராதனச் சொத்துக்கள் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியின் பூட்டினை உடைத்து பரிசோதனை செய்வதற்கு முயன்றபோது புராதனச் சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய சேதம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) அகழ்வுகளின் போது கிடைக்கப்பெற்ற நிதி மற்றும் தொல்பொருளியல் பெறுமதியுடைய கோபுரங்கள் உட்பட

ஏனைய புராதனச் சொத்துக்கள் உதவி பணிப்பாளரினால் பொறுப்பேற்கப்பட்டு காவற்துறைப் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளப்படாமல் 2013 ஒக்தோபர் 23 ஆம் திகதி இரவில் விஹாரையில் தங்கி மறுநாள் மாகாண அலுவலகம் வரை பயணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு செய்வதற்கு அவருக்கு உரிய அனுமதி இல்லாத போதிலும் அவரின் எண்ணப்பிரகாரம் செயற்பட்டிருந்தார்.

(x) நீலகிரி அகழ்வுகளில் பாரிய அளவில் புராதனச் சொத்துக்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அகழ்வு நிலப்பிரதேசத்திற்கு அத்தியாவசியமான உபகரணங்களாகிய புராதனச் சொத்துக்களை வைத்திருக்கும் பாதுகாப்புப் பெட்டிகள், புகைப்படக கருவி கணனி மற்றும் அளவை உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்காமையால் உத்தியோகத்தர்களுக்கு தமது பிரத்தியே கணனிகள் மற்றும் புகைப்படக் கருவிகளை பயன்படுத்த வேண்டியிருந்தது.

(xi) 2013 ஒக்தோபர் மாதத்தில் கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் தொடர்பில் சட்ட அறிக்கை உள்ளடக்கப்பட்டு புகைப்படமெடுத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் செய்யப்பட்டு அவை வெளிப்படையான தன்மையுடன் முத்திரையிடப்பட்டு விரைவாகவும் பாதுகாப்பான முறையிலும் எடுத்து வருவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று திணைக்களத்தின் முகாமைத்துவத்தால் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. 2013 ஒக்தோபர் 19 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை அகழ்வுப் பிரதேசத்தில் இருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பரிசோதனை செய்வதற்கு சென்றிருந்த உத்தியோகத்தர்கள் செயற்பட்டிருந்த பொருத்தமற்ற முறையின் பிரகாரம் மாணிக்கக்கற்கள் என எண்ணக்கூடிய நிறக்கற்கள் உட்பட கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படவில்லை என கணக்காய்வின்போது தவிர்க்க முடியாதிருந்தது.

(கி) கிடைக்கப்பெற்ற புராதனச் சொத்துக்கள் தொடர்பான முன்னோக்கிய வேலைத்திட்டமொன்றின்மை

-----------------------------------------------------------------------------------------------------------

நீலகிரி சேயவில் இதுவரை கிடைக்கப்பெற்ற ஏறத்தாழ 15 மடடிலுமான கோபுரங்களினுள் புனித தாதுக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படும் அதேவேளை அவை தாது கண்காட்சிக்காக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. இது தொடர்பில் தொல்பொருளியல் துறையிலுள்ள விசேட நிபுணர்களின் உதவியுடன் கணிப்பீடுடொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்றினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அத் தொன்மையான கோபுரங்களை ஸ்தாபிப்பதற்கு மேற்கொள்ள வேண்டியசெயல்மார்க்கங்கள் தொடர்பான முன்னோக்கிய திட்டங்களை ஒழுங்கமைப்பதற்காக 2013 திசெம்பர் 31 வரையிலும் கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் தொன்மையான பொற்கோபுரங்கள் உள்ளடங்களாக தொல்பொருளியல் திணைக்களத்தின் பாதுகாப்புப் பெட்டகங்கள் மற்றும் களஞ்சியங்களில் சமய பெறுமதியின்றி 1-3 வருட காலமாக வைக்கப்பட்டிருந்தது.

(கீ) தொலுவில தொல்பொருளியல் பாதுகாப்பு வலயத்தின் எல்லைகளைஉறுதிப்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------------------

அநுராதபுரம் தொலுவில தொல்பொருளியல் பாதுகாப்பு வலயம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் தொலுவில தொல்பொருளியல் பாதுகாப்பு வலயம் அநுராதபுரம் - திருகோணமலை பாதையில் அநுராதபுரம் நகரத்திலிருந்து சுமார் 500 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் அது 38 ஏக்கர்கள் நிலப்பரப்பினைக் கொண்டதாகும். இப் பாதுகாப்பு வலயம் அநுராதபுரம் நகரிற்கு அண்மியதாக உள்ளமையால் பல்வேறு நபர்கள் அதன் தெற்கு மற்றும் கிழக்கு திசைகளில் அத்துமீறக் கைப்பற்றி குடியேறியுள்ளனர்.

(ii) பாதுகாப்பு வலயமெங்கிலும் தொல்பொருளியல் சான்றுகள் பல வியாபித்திருக்கின்றமையுடன் பாதுகாப்பு வலயத்தின் மத்தியில் கிராமவாசிகள் நடைபயணம் மற்றும் வாகனங்கள்

மூலம் பயணஞ்செய்கின்றமையால் புராதனச் சொத்துக்களின் இருப்பிற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக இருந்தது.

(iii) தொல்பொருளியல் பாதுகாப்பு வலயம் பாதுகாப்பற்று இருந்தபோதிலும், எல்லைத்தூண்களை கொண்டு பாதுகாப்பு வேலிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பாதுகாப்பு வலயத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கையில் கீழக்குறிப்பிடப்பட்டுள்ள யோசனைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

- தொல்பொருளியல் பாதுகாப்பு வலயத்தின் பாதுகாப்பிற்காக எல்லைகளுக்கு நிலையான செயன்முறையொன்று பாவிக்கப்பட்டு எல்லைகளை ஒழுங்கமைத்து உறுதியான அரணொன்றை உருவாக்குதல்.

- எல்லைகளின் அண்மையிலுள்ள சகல தொல்பொருளியல் சின்னங்களையும் பாதுகாத்தல்.

- அண்மிய கிராமத்திற்குச் செல்வதற்காக தொல்பொருளியல் பணிப்பாளர் நாயகத்தால் ஒதுக்கப்பட்ட பாதையின் எல்லைக்கண்மையில் உள்ள தொல்பொருளியல் சான்றுகளை பாதுகாக்கும் வகையில் இலகு வாகனங்கள் மட்டும் பயணஞ்செய்ய அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

இந்த யோசனைகளை துரிதமாகச் சொயற்படுத்த வேண்டியுள்ளதெனினும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) அநுராதபுரம் அரிப்புவலில் அமைந்துள்ள சங்கமித்தாராமையை கையேற்றல்

---

மிரிசவெட்டிய தொல்பொருளியல் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள 2 $^{1}/_{2}$ ஏக்கர் அளவான காணி மற்றும் நீதிபதி பாவித்த இருமாடிக் கட்டிடம் என்பன 1990 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அமைச்சரவையின் 113(20) ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் கீழ் தொல்பொருளியல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தும் பொருட்டு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு

கையளிக்கப்பட்டிருந்தன. தொல்பொருளியல் திணைக்களத்தால் 1990 திசெம்பர் 01 ஆம் திகதி தசசில் மாதாக்களுக்காக கல்விப்பீடமொன்று ஆரம்பிப்பதற்கு இவ் விடுதி வழங்கப்பட்டிருந்ததெனினும் 02 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதி மட்டுமே சாஸ்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தொல்பொருளியல் திணைக்களத்தின் வடமத்திய மாகாண அலுவலகம் நடாத்திச்செல்லும் இடமானது நூதனசாலைக்கு பொருத்தமான வகையில் நிருமாணிக்கப்பட்ட கட்டிடமொன்றாவதுடன் தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அதன் உரித்து இருக்கவில்லை. இன்றளவிலும் பராமரிப்பு செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு வழங்குதல் என்பன தொல்பொருளியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நீதியரசரின் உத்தியோகபூர்வ இல்லமானது தொல்பொருளியல் அலுவலகத்திற்கு உகந்ததென உதவிச் தொல்பொருளியல் பணிப்பாளரினால் ஏதுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தும் அக் கட்டிடத்தை கையேற்பபுச் செய்வதற்கான செயற்பாடுகள் துரிதமாக நடைபெறாமை முகாமைத்துவ நலிவொன்றான அவதானிக்கப்பட்டது.

(கூ) அநுராதபுரம் நூதனசாலையில் பார்வையிலிருந்து அகற்றப்பட்ட மூர்த்தி மண்டபம்

---

மூர்த்தி மண்டபத்தின் புனர்நிர்மாண பணிகளுக்காக கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. 2013 பெப்ரவரி 28 ஆம் திகதி அநுராதபுரம் மூர்த்தி மண்டப கட்டிடத்தின் புனர்நிர்மாணம் தொடர்பில் செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தை தீர்ப்பதற்காக ரூபா 207,990 ஆன தொகை தொல்பொருளியல் திணைக்களத்திற்கு மீளச்செலுத்தப்பட்டிருந்தெனினும் செலவினங்களுக்குரிய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் செலவினத்தை உறுதிபடுத்த அவசியமான சான்றுகள் அல்லது செலவின அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(கெ) உதவிப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பிரதேசத்தில் அத்துமீறிக் குடியிருப்போரை அகற்றுதல்

---

தொ்ல்பொருளியல் திணைக்களத்திற்குரிய அநுராதபுரம் ஜயந்தி மாவத்தையிலுள்ள 40 பர்சஸ் அளவான இடமானது உதவிப்பணிப்பாளர் உத்தியோகபூர்வ இல்லமொன்றை

நிருமாணிப்பதற்கு உகந்ததாக உத்தேசிக்கப்பட்டிருந்ததெனினும் அங்குள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்படவில்லை.

(கே) அநுராதபுரம் விஜயராமை தொல்பொருளியல் சின்னங்களின் தொகுதி பாதுகாக்கப்படாமை

---

1931 மார்ச் 13 ஆம் திகதிய 7834 ஆம் இலக்கம் கொண்ட வர்த்தமானி மூலம் அநுராதபுரம் விஜயராமை தொல்பொருளியல் சின்னங்களின் தொகுதியானது தொல்பொருளியல் பாதுகாப்பு வலயமாகப் பெயரிடப்பட்டிருந்தது. அச் சின்னங்களின் தொகுதியானது 22 ஏக்கர் கொண்ட நிலப்பிரதேசத்தில் வியாபித்துள்ளமையுடன் இங்கு விசாலமான விகாரைக் கட்டிமொன்று இருந்தமைக்கான தொல்பொருள் சான்றகள் சாட்சியமளிக்கின்றன. தொல்பொருளியல் பாதுகாப்பு வலயமொன்றாக பெயரிடப்பட்டு 80 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தபோதிலும் இதுவரை பாதுகாப்பளிக்கப்படாமையினால் புதையல் திருடர்களினால் ஏற்படுகின்ற சேதங்கள் மற்றும் உடைந்து விழுதல் காரணமாகமேலும் சேதத்திற்குள்ளாகிக் காணப்பட்டது. 2010,2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இங்கு உடைந்து விழுந்திருந்த தாகபைகளை பாதுகாப்பதற்கு மதிப்பீடொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்ததெனினும் ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிராமையினால் பாதுகாப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,104,637 ஆன ஒதுக்கங்களும், மாணிக்கம்பிடிய தாதுகோபுரத்தினை பாதுகாப்பதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் வருடத்திற்காக இவ் ஆராமைத் தொகுதியின் பாதுகாப்பிற்காக ஒதுக்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

## 2.13 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்க்பபட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினரின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 46 | 09 | 37 |
| மூன்றாம் மட்டம் | 56 | 26 | 30 |
| இரண்டாம் மட்டம் | 737 | 430 | 307 |
| ஆரம்ப மட்டம் | 1,603 | 1,267 | 336 |
| மொத்தம் | 2,442 | 1,732 | 710 |

மீளாய்வாண்டின் இறுதியில் 710 பதவி வெற்றிடங்களை நிரப்பவேண்டியிருந்தமையுடன் 2014 நவம்பர் 30 ஆம் திகதியளவில் அது 594 வரை குறைத்துக்கொள்ளப்பட்டிருந்ததெனினும் எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 3. தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 05 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இங்கே (அ) முதல் (ஆ) வரை காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 3.4 முதல் 3.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்கள் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 05 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,095,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 10 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்கான தேறிய ஏற்பாட்டில் 50 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தன.

**(ஆ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

20801 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பாக 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 519,626 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், நூதனசாலைகள் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அத்திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நூதனசாலையில் விசேட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் 14 பிரிவுகள் வரையில் காணப்பட்ட போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவ் ஒவ்வொரு பிரிவினாலும் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கும் செயற்பாடுகள் தொடர்பான விபரம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நூதனசாலையால் தயாரிக்கப்பட்ட பூர்த்தியடையாத செயல்நடவடிக்கைத்திட்டத்திற்கு இணையாக பௌதீக முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் பொதுவாக நூதனசாலைக்குத் தேவையான பொருட்களினதும் சேவைகளினதும் கொள்வனவு மற்றும் இதற்கு உரித்தான செலவின விபரமும் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருந்தன.

## 3.5 சொத்து முகாமைத்துவம்

**விளைவற்றதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) யப்பான் ஒத்துழைப்பு மன்றத்தால் 13 ஆண்டுகளுக்கு முன்னர் அன்பளிப்பாகப் பெற்ற மிகநுட்பமான படப்பிடிப்புப் பிரிவில் உள்ள Micro Film Scanner, Reader, Camera, Printer உள்ளடங்கலாக இயந்திரங்களும் 26 உபகரணங்களும் விளைவற்றும் குறைவான பயன்பாட்டுடனான சொத்துக்களாக பல வருட காலமாக நிலவின.

(ஆ) மிகநுட்பமான படப்பிடிப்புப் பிரிவில் பல உபகரணங்கள் செயலிழந்து காணப்பட்டமையால் மிகநுட்பமான படப்பிடிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படாமையால் அப் பிரிவிற்காக ஒதுக்கப்பட்ட 2,911 சதுர அடி மாத்திரமேயான தரை அளவு குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(இ) 2 ½ வருடத்திற்கு மேலான காலமாக பூங்கா கண்காணிப்பு பதவி வெற்றிட நிலையில் காணப்பட்டமையால் புல் செதுக்குவதற்காக பயன்படுத்தப்படும் சீ விசிறி உழவு இயந்திரத்திற்கு உரித்தான உபகரணம் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.6 செயலாற்றல்

**போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

கொழும்பு நூதனசாலையில் உள்ள நூலகம் 1992 ஆம் ஆண்டு முதல் கூடிய தரத்திலான திணைக்கள நூலகமாக நியமிக்கப்பட்டிருந்தது. இந் நூதனசாலை நூலகத்தில் உள்ள பத்து இலட்சத்திற்கு அதிகமான புத்தகங்களும், தேசிய முக்கியத்துவம்வாய்ந்த மிகப் பழைமை வாய்ந்த நூல் தொகுதிகளையும், 4000 தொகுப்புக்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகளும் காணப்பட்டன. அப் பெறுமதிவாய்ந்த பதிவேடுகளில் உள்ள தகவல்கள் வேறு ஊடகத்தில் பதிவுசெய்யப்பட்டு பாதுகாக்கப்படும் நோக்கில் மிகநுட்பமான படப்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இவற்றில் 1120 புத்தகங்களும் 768 நூலகப் புத்தகங்களும் மாத்திரமே மிகநுட்பமான படப்பிடிப்புச் செய்யப்பட்டிருந்தன.

### 3.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கும் இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபைக்கும் இடையே 2011 ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட வாடகை உடன்படிக்கையின் படி, 10 ஆண்டுகளுக்காக தேசிய நூதனசாலைகள் வளாகத்தில் உள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் 8,000 சதுர அடியிலான நில அளவும் இதற்குரிய பொது வசதிகளுடன் நூதனசாலை ஞாபகார்த்தக் கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஒன்றும் நடாத்தப்படுவதற்கு இலங்கை கைப்பணிகள் சபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. உரிய வாடகை உடன்படிக்கை மற்றும் லக்சல கொண்டுநடாத்தப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாடகை உடன்படிக்கையின் 07 ஆம் பிரிவின் படி, லக்சல நிறுவகம் கொண்டு நடாத்தப்படும் ஞாபகார்த்தக் கூடம் மற்றும் சிற்றுண்டிச்சாலை திறக்கப்படாத ஒவ்வொரு சந்தர்ப்பத்தின் போதும் அதன் பாதுகாப்பு வாடகையாளரால் வழங்கப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் படி, குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த ஆதனங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதற்கு மேலதிகமாக பொறுப்பும் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஆ) இவ்வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வண்டி மேடை பேணப்படுவதற்கு லக்சல நிறுவகத்திற்கு குத்தகை உடன்படிக்கையின் மூலம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அம் மேடை தேசிய நூதனசாலைகள் திணைக்களத்திற்கு லக்சல நிறுவகத்தால் 2014 ஒக்டோபர் 03 ஆம் திகதி வரை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. லக்சல நிர்மாணித்த இரண்டு மாடி உத்தியோகபூர்வ விடுதியைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இவ் வண்டி மேடையின் திறப்பு லக்சலவின் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) வாடகை உடன்படிக்கையின் 09 ஆம் பிரிவின் பிரகாரம், லக்சல நிறுவகம் திறந்திருக்கக் கூடிய நேரம் மு.ப. 8.00 மணி முதல் பி.ப 8.00 மணி வரையான போதிலும் இலங்கை கைப்பணிக் கைத்தொழில் சபைத் தலைவரால் தேசிய நூதனசாலைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு விலாசமிடப்பட்ட 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய கடிதத்தின் படி, இவ் லக்சல காட்சிக் கூடம் நாளாந்தம் மு.ப. 6.00 மணி முதல் இரவு 12.00 வரை திறந்திருக்கும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) லக்சல நிறுவகம் இயங்கிவரும் கட்டிட வளாகத்தை நோக்கி நிர்மாணிக்கப்பட்ட வண்டி மேடை 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காட்சிப்படுத்தும் நிலையில் காணப்பட்டது. நூதனசாலைக்கு உரித்தான மிகப் பழைமை வாய்ந்த 08 வண்டிகள் காட்சிப்படுத்தலுக்காகவும் லக்சல நிறுவகத்திற்கு உரித்தான 03 வண்டிகள் விற்பனைக்காகவும், ஒரே மேடையில் வைக்கப்பட்டிருந்தன. இம் மேடையின் உரிமை நூதனசாலைக்கு உரித்தான போதிலும், அதன் திறப்பு நூதனசாலைக்கு வழங்கப்பட்டிராததுடன் அதன் பராமரிப்பு நடவடிக்கைகள் லக்சல நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இரண்டு நிறுவகங்களின் நோக்கத்திற்காக பழைய பொருட்கள் வைக்கப்படும் ஒரே மண்டபமாக இருந்தமையால் அவற்றின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சிக்கல் ஏற்பட்டிருந்தது.

**3.8 நட்டங்களும் இழப்புகளும்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மார்ச் 16 ஆம் திகதி கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற களவினால் காணாமற்போன 221 நூதனப்பொருட்கள்

காணப்பட்டதுடன் அப் பொருட்களின் பெறுமதி ரூபா 4,440,140 இற்கு மதிப்பிடப்பட்டிருந்தது. இதில் 94 பொருட்கள் அடிப்படை நிலையிலும், பொருட் பகுதிகளும் கற்களாகவும் 57 பொருட்களும் மீளக்கிடைத்திருந்ததுடன் ஏனைய பொருட்கள் வெட்டி அகற்றப்பட்டிருந்தமையால் சேதமுற்றிருந்தது. இவ்வாறு சேதமடைந்த நூதனசாலைப் பொருட்கள் நீதிமன்றத்தின் பொறுப்பில் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு நூதனசாலையில் பிரதான படிக்கட்டின் இடது பக்கம் 2013 மார்ச் 28 ஆம்திகதி உடைந்ததன் காரணமாக அதனை பழுதுபார்க்கும் வரை முதலாம் மாடியின் காட்சிக்கூடம் மக்களின் பார்வைக்கு அனுமதிக்கப்பட்டிராமையால் 2013 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் உள்நாட்டு, வெளிநாட்டு, வயது முதிர்ந்தவர்கள், சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் போன்ற சகல தரப்பினரது அனுமதிப்பத்திரம் 50 சதவீத அளவில் குறைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கொழும்பு நூதனசாலையைப் பார்வையிடுவதற்கு 2012 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 2013 ஆம் ஆண்டின் போது 4,556 பேர் வருகை தந்திருந்த போதிலும் 09 மாத காலமாக குறைந்த கட்டண அளவு அறவிடப்பட்டமையால் கொழும்பு நூதனசாலையின் அனுமதிப்பத்திர வருமானம் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 3,811,940 ஆல் குறைவடைந்திருந்தது.

(ii) கொழும்பு நூதனசாலையைப் பார்வையிடுவதற்கு 2013 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் திசெம்பர் 01 ஆம் திகதி வரை வருகைதந்த பார்வையாளர்களிடமிருந்து குறித்த கட்டணம் அறவிடப்படுவதற்கு முடியாமையால் நூதனசாலைத் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெறாத வருமானம் ரூபா 6,747,595 ஆகக் காணப்பட்டது.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 04 | 07 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 114 | 71 | 43 |
| (iv) | ஆரம்ப நிலை | 205 | 191 | 14 |
| | மொத்தம் | 334 | 267 | 67 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 67 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

(ஆ) 2012 மார்ச் 16 ஆம் திகதி கொழும்பு தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற களவின் பின்னர் நூதனசாலைத் திணைக்களத்தின் கோரலில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் 2013 மே 23 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரின் பதவியும் 03 உதவி பாதுகாப்பாளர்களின் பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு 2014 ஒக்டோபர் 15 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. தலைப்பு 209 – தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 23 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

--------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 4.4 இலிருந்து 4.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

--------------------------------------------------

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்தினால் 20901 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 03 மாதங்களுக்கு மேற்பட்ட தாமதத்தின் பின்னர் 2014 யூலை 16 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### (ஆ) பாதீட்டு முரண்

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 13 மில்லியன் தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 12 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 50 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (இ) பொது வைப்புக் கணக்கு

--------------------------------------------

02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,337,517 தொகையான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

20901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 552,746 ஆக இருந்ததுடன், அந்த நிலுவையாக இருந்த மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2013 ஆகஸ்ட் 18 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சுவடிக்கூடத் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளுக்குத் தேவையான உருக்கு இராக்கைகளை அமைப்பதற்குத் தேவையான உபபாகங்களாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,958,000 பெறுமதியான உருக்கு தட்டுகள் மற்றும் அது தொடர்பான உபகரண இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் இந்த உபபாகங்கள்

திணைக்களத்திற்குக் கிடைத்து ஒரு வருடத்திற்கு மேற்பட காலம் கடந்திருந்த போதிலும் அதில் 10 சதவீத அளவே பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ii) 2008 பெப்ரவரியில் தனியார் கம்பனியிலிருந்து ரூபா 3,050,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட Kodak File Master Scanner இயந்திரம் 2013 மே முதல் 2014 செப்தெம்பர் வரை திணைக்களத்தின் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் பின்னரும் இந்த இயந்திரம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் இந்த இயந்திரத்திற்காக வருடாந்த சேவைக் கட்டணமாக ரூபா 305,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) திணைக்களத்திற்காக ரூபா 638,329,722 தொகை செலவில் 04 மாடிகளையுடைய புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது 2012 திசெம்பரில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதன் மொத்த சதுர அளவான 6,836 சதுர மீற்றர் திணைக்களத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான அலுவலக செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு 3,809 சதுர மீற்றர் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அலுவலக வளவில் 2,322 சதுர மீற்றர் அல்லது 60 சதவீத அளவு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சுவடிக்கூடத் திணைக்களத்தினால் 2014 மே 31 ஆந் திகதி வரையிலும் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2009 ஆம் ஆண்டின் போதே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 751(1) இன் பிரகாரம் அரசாங்கத் திணைக்களங்களுக்குக் கிடைக்கின்ற சகல பொருட்களும் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 திசெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்ட பொருள் இருப்புக்கள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டில் கைப்பற்றப்பட்ட பொருள் விடயங்களும் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 இணங்காமைகள்**

2013 சனவரி 31 ஆந் திகதிய 157(i) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஆகக்கூடிய இடர்கடன் தொகையைத் தீர்மானிக்கும் போது 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தமையும் அதற்குப் புறம்பாக கொடுப்பனவு செய்யப்பட்டிருக்குமாயின் அவ்வாறு எவ்லையினை விஞ்சி செலுத்தப்பட்ட பணம் உடனடியாக மீள அறவிட வேண்டியமையும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு முரணாக ரூபா 250,000 எல்லையினை விஞ்சி இடர்கடன் தொகை வழங்கப்பட்டமையினால் திணைக்களத்தின் இரண்டு உத்தியோகத்தர்களினதும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடர்கடன் மீதி ரூபா 401,885 மற்றும் ரூபா 346,036 ஆக இருந்தன.

**4.7 செயலாற்றல்**

2013 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

2012 திசெம்பர் 18 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்ட சுவடிக்கூடத் திணைக்களத்தின் புதிய கட்டிடத்திற்காக 2013 ஆம் ஆண்டில் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 225 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டில் நிதி செயல்முன்னேற்றம் ரூபா 40.2 மில்லியனாக இருந்ததனால் மேற்கூறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 13 மில்லியன் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் புதிய

கட்டிடத்திற்காக தளபாடங்களைக் கொள்வனவு செய்தலின் நிதிசார் செயல்முன்னேற்றம் மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் 19 சதவீதம் வரை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

பின்வரும் சந்தர்ப்பங்களில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) காட்சிப்படுத்துதல் மற்றும் அறிவூட்டுதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காட்சிப்படுத்துதல் இலக்கு நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் 02 அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பதிவேடு முகாமைத்துவம் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான 04 ஐந்து நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(iii) 36 அதிமுக்கிய ஆவணப் பகுதிகளைப் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது 26 பட்டோலைகள் மாத்திரம் பாதுகாக்கப்பட்டிருந்தது.

(iv) அதிமுக்கிய ஆவணங்களில் உள்ள தகவல்களை வேறு ஊடகங்களில் வைப்புச் செய்து பாதுகாத்தல், அதிமுக்கிய ஆவணங்களைப் பரிசீலனை செய்யும் பொது மக்களுக்கும் பரிசோதகர்களுக்கும் இலகுவாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் மூலப் பிரதியை அடிக்கடி பயன்படுத்துவதைக் குறைக்கும் நோக்கத்தில் பத்திரிகைகளில் நிழற்பட பிரதிகள் எடுக்கப்பட்டிருந்தன. இதன் கீழ் 04 பத்திரிகைகளில் 100,000 வெளிப்படுத்தும் நிழற்படங்களை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது 86,481 நிழற்படப் பிரதிகள் மாத்திரம் எடுக்கப்பட்டிருந்தது.

(v) வெளியீடுகளை பகிரங்கப்படுத்தலின் கீழ் 02 வெளியீடுகளை மீள் பிரசுரிப்பதற்கும் 02 வெளியீடுகளை புதிதாக அச்சிடுவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது அவைகள் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) அரசுடமை மற்றும் கோவில்கள் தேவாலயங்களின் 400-500 (7000-8000) காணிப் பதிவேடுகளில் இலக்கமிடும் திட்டமொன்று பதிவேட்டு இலக்கமிடலின் கீழான நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் அபிவிருத்தி செயல்முன்னேற்றத்தில் இது காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு திட்டமிடப்பட்ட டைம்ஸ் சேகரிப்பில் உள்ள செய்திப்பத்திரிகையில் பிரித்தெடுக்கப்பட்ட 55,000 கூறுகளையும் இலக்கமிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

### (அ) சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படுகின்ற சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடத்திற்குக் குறைவு | 03 வருடத்திற்கு மேல் | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புக்கள் | 61,256 | 72,535 | 3,074 | 136,865 |
| (ii) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை | 7,792 | 1,738,230 | 408,135 | 2,154,157 |
| (iii) | இனங்காணப்படாத வரவு | 2,812,564 | 1,956,969 | 382,087 | 5,151,620 |
| (iv) | இனங்காணப்படாத செலவு | 126,061 | 1,316,924 | 5,486,825 | 6,929,810 |

**(ஆ) சரி செய்யப்படாத வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள்**

முன்னைய கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சரிசெய்யப்படாத பின்வரும் வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள் 2014 யூன் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கும் போது அவதானிக்கப்பட்டன.

(i) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டிருந்த போதிலும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 3 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 747,080 ஆகும்.

(ii) 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்டிருந்தும் தேறாத 70 காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 130,769 ஆகும்.

(iii) 2008 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை இனங்காணப்படாத 12 கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,236,135 ஆகும்.

(iv) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இனங்காணப்படாத 4 பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 1,332,978 ஆகும்.

**4.9 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 04 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 41 | 06 | 35 |
| (iii) | இரண்டாம் நிலை | 132 | 55 | 77 |
| (iv) | ஆரம்ப நிலை | 74 | 49 | 25 |
| | மொத்தம் | 253 | 114 | 139 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 139 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

**(ஆ) திணைக்களத்திற்குத் தேவையான அனேக பதவிகளில் வெற்றிடம் காணப்படுகின்றமை.**

---

திணைக்களத்தின் பொதுவான செயற்பாடுகளைப் பேணுவதற்குத் தேவையான திணைக்களத்திற்குரிய அனேக பதவிகள் 2014 யூலை 31 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஆவணப் புலனாய்வு உத்தியோகத்தர், மொழிபெயர்ப்பாளர், அதிமுக்கிய ஆவண உதவியாளர், பதிவேட்டை நெறிப்படுத்தும் உத்தியோகத்தர், தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் புத்தகக் கட்டுனர் பதவிகள் என்பன நூறு சதவீதமும் வெற்றிடமாகக் காணப்பட்டன. உதவி சுவடிக்கூட பாதுகாப்பாளர், அதிமுக்கிய ஆவண ஆராய்ச்சி உதவியாளர், சுவடிக்கூட பாதுகாப்பு உத்தியோகத்தர், உதவி பதிவேட்டு மீள் வடிவமைப்பாளர் பதிவேட்டு மீளமைப்பாளர், பெயர் வழிக்கோவை உதவியாளர், கட்புல செவிப்புல தொழில்நுட்பவியலாளர் பதவிகளில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வெற்றிடம் காணப்பட்டது. இதனால் திணைக்களத்தின் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதைப் போலவே ஒட்டுமொத்த செயலாற்றலை முன்னேற்றுவதிலும் பிரச்சினைகள் தோன்றியிருந்தது.